DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII - CODE OF ORIGINAL PROCEDURE)
IN THE COURT OF ASSISTANT SESSIONS , DHARAPURAM
**Sessions Case No. 177/2023**

**(Preliminary Register.No.6/2023 )**
Deposition of Witness **அ.சா.3 ன் வாக்குமூலம்**

Prosecution Witness No.3

| | | | |
|---|---|---|---|
| NAME: | சுரேஷ் | FATHER'S NAME: | பொன்னுச்சாமி |
| VILLAGE: | தாராபுரம் | TALUK: | தாராபுரம் |
| CASTE: | இந்து | CALLING: | டாஸ்மார்க் கடையின் விற்பனையாளர் |
| RELIGION: | | AGE: | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 27.06.2025.
1,3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை
**<u>முதல் விசாரணை</u>** :–

நான் தற்போது தாராபுரம் காமராஜபுரத்தில் குடியிருக்கிறேன். நான் தாராபுரம் தச்சம்புதுார் ரோட்டில் உள்ள பாலசுப்பிரமணியம் நகர் டாஸ்மார்க் கடைஎண்.3439 ல் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். அங்கு தற்போது கொற்றவேல் மேற்பார்வையாளரக பணிபுரிந்து வருகிறார். சம்பவம் நடந்த போது அ.சா.1 விற்பனையாளராகவும், அ.சா.2 மேற்பார்வையாளராகவும் பணிபுரிந்து வந்தார்கள். கடந்த 25.01.2021ம் தேதி கடையில் நானும், அ.சா.1ம் கடையில் மது பாட்டில்களை விற்பனை செய்துகொண்டிருந்தோம். அன்று இரவு 8 மணிக்கு எனது மனைவி உடல்நிலை சரியில்லை என்று எனக்கு தகவல் சொன்னதால் நான் மேற்பார்வையாளரிடம் சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டேன். பின்பு அன்று இரவு சுமார் 11.15 மணிக்கு மேற்பார்வையாளரான அ.சா.2 எனக்கு போன் செய்து, அ.சா.1 ஐ தச்சம்புதுார் ரோட்டில் உள்ள பொள்ளாச்சி ரோடு செல்லும் கட்ரோட்டில் 3 நபர்கள் வழிமறைத்து அடித்து, விற்பனையான பணம் ரூ.1,12,310/– ஐ பிடுங்கி கொண்டு சென்று விட்டதாகவும் அ.சா.1க்கு ரத்தக்காயம் ஏற்பட்டதால் நானும், அ.சா.1ம் தாராபுரம் அரசு மருத்துவமனையில் இருப்பதாக சொல்லி என்னை அரசு மருத்துவமனைக்கு அ.சா.2 வரச்சொன்னார். நான் அரசு மருத்துவமனை வந்து சிவக்குமாரை பார்த்தபோது அவருக்கு இடது தலையிலும், வலது கண்ணத்திலும் ரத்தக்காயங்கள் இருந்தன. பின்பு நான் சிவக்குமாரிடம் என்ன நடந்தது என்று கேட்ட போது அவர் வழக்கம் போல் கடையின் விற்பனையை முடித்துவிட்டு விற்பனையான பணம் ரூ.1,12,310/– என்னுடைய கருப்பு கலர் பட்டன்லாக் பையில் எடுத்து வைத்து என்னுடைய Super Splender இருசக்கர வாகனத்தில் தச்சன்புதுார் ரோட்டில், பொள்ளாச்சி ரோடு செல்லும் கட்ரோட்டில் 3 நபர்கள் வழிமறித்து பாட்டிலால் தலையில் இடது பக்கத்தில் அடித்தும், அதில் ஒரு நபர் பையை பிடிங்கிக்கொண்டு சென்றுவிட்டதாக சொன்னார்.

2) அதன்பின்னிட்டு சம்பவ இடத்திலிருந்து அ.சா.1 சிவக்குமார், மேற்பார்வையாளருக்கு போன் செய்து நடந்த சம்பவம் குறித்து சொன்னதாகவும், பின்பு மேற்பார்வையாளர் சம்பவ இடம் வந்து என்னை தாராபுரம் அரசு மருத்துவமனை

அழைத்து வந்தார். பின்பு இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**<u>1,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். அ.சா.2 குணசேகரன் எனக்கு மேல் அதிகாரியான மேற்பார்வையாளர் ஆவார். அசா.1 சிவக்குமார் என்னுடன் பணியாற்றுபவர். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. அசா.2 சொல்லி தான் எனக்கு தெரியும். நான் சுமார்21 ஆண்டுகளாக டாஸ்மார்க்கில் வேலை செய்து வருகிறேன். அசா.2 குணசேகரன் மீது ஏற்கனவே குண்டடம் காவல் நிலையத்தில் கையாடல் வழக்கு இருந்து அவர் 1 ½ வருடம் பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. பொதுவாக அசா.1 சிவக்குமாரின் வேலை பாட்டில்களை விற்பனை செய்வது மட்டும்தான். பணம் வரவு செலவு பார்ப்பது அனைத்தும் கடை மேற்பார்வையாளர் வேலை தான். என்ன வேலையாக இருந்தாலும் மேற்பார்வையாளர் தான் பணத்தை எடுத்துசென்று அதை பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டும் என்றால் சரிதான். அ.சா.1 சிவக்குமாருக்கு பணத்தை எடுத்துச்செல்ல எந்த அதிகாரமும் கிடையாது. சம்பவம் நடந்ததாக சொல்லும் சாலையில் மது அருந்தி அந்த பாட்டில்களை ரோட்டில் உடைத்துப்போட்டு போவது வழக்கம். போலிஸ் விசாரணையில் நான் எனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால் தான் முன்பே பணியில் இருந்து சென்று விட்டதாக சொல்லவில்லை. நான் அவ்வாறு எங்கேயும் செல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தகவல் சொல்லிவிட்டு தான் முன்பே சென்றேன். அ.சா.1 ஐ யாரும் அடிக்கவும் இல்லை, காயம் அடையவும்இல்லை என்றும் விபத்தில் காயம் ஏற்பட்டு அதை அடித்ததாக சொல்வது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு அதனடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஒப்பம்.கு.சக்திவேல்)
சார்பு நீதிபதி
தாராபுரம்.